Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ்
மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், ஜனவரி 09, 2025 | இதழ் 271

1 கிலோ பச்சரிசி – சர்க்கரை, முழுக்கரும்பு வேட்டிரூசேலை 2 கோடியே 21 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு: ஸ்டாலின் துவக்கினார்

சென்னை, 09 ஜனவரி 2025: தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிட 2 கோடியே 21 லட்சத்து 94 ஆயிரத்து 585 அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்புடன் கூடிய பொங்கல் தொகுப்பு வழங்கும் திட்டம், இலவச வேட்டி சேலைகள் வழங்கும் திட்டத்தின் கீழ், 1 கோடியே 77 லட்சத்து 22 ஆயிரம் வேட்டிகள், 1 கோடியே 77 லட்சத்து 64 ஆயிரம் சேலைகள் வழங்கும் திட்டத்தையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இன்று சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் சைதாப்பேட்டை, சின்னமலையில் அமைந்துள்ள நியாயவிலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தையும், இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தையும் முதல்வர் தொடங்கி வைத்தார். பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்திற்கு 249.76 கோடி ரூபாய் செலவு.

பொங்கல் திருநாளையொட்டி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச வேட்டி - சேலை வழங்கும் திட்டத்தின் கீழ், 1 கோடியே 77 லட்சத்து 22 ஆயிரம் எண்ணிக்கையிலான வேட்டிகள் மற்றும் 1 கோடியே 77 லட்சத்து 64 ஆயிரம் எண்ணிக்கையிலான சேலைகள் நியாய விலைக் கடைகள் மூலம் பொங்கல் தொகுப்புடன் வழங்கப்படும். தமிழ்நாடு முழுவதும் உள்ள 37,224 நியாய விலைக்கடைகளில் இன்று முதல் 13 ந் தேதி வரை பொங்கல் பரிசுத்தொகுப்பு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும். அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டது. இப்பணிக்கு கூட்டுறவுத்துறை, வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் கைத்தறித்துறையைச் சேர்ந்த சுமார் 50 ஆயிரம் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் தொகுப்பு வழங்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், துணைமேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணன், வருவாய் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பெ.அமுதா, கைத்தறி துறை செயலாளர் வே.அமுதவல்லி, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ந.சுப்பையன், கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பதியில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 6 பேரின் குடும்பத்திற்கு தலா ரூ.25 லட்சம் நிவாரணம் அறிவிப்பு பிரதமர் மோடி இரங்கல்; சந்திரபாபு நாயுடு நேரில் ஆறுதல் சேலத்தைச் சேர்ந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.2 லட்சம்: ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, 09 ஜனவரி 2025: திருப்பதி கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவரின் குடும்பத்தினருக்கு 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரி கிராமம், தாசனூரைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவரின் மனைவி மல்லிகா (வயது 55) நேற்று (8 ந் தேதி) ஆந்திர மாநிலம், திருமலை திருப்பதி கோயிலில் சுவாமி தரிசனம் செய்ய சென்றிருந்தபோது, அங்கு சொர்க்கவாசல் திறப்பிற்காக வழங்கப்பட்ட இலவச தரிசனத்திற்கான நுழைவுச்சீட்டை வாங்கும்போது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தத் துயரமான செய்தியை அறிந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் உடனடியாகத் தெரிவித்துக் கொண்டதுடன், உயிரிழந்த மல்லிகாவின் உடலை அவரது சொந்த ஊருக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு சார்பில் மேற்கொள்ள உத்தரவிட்டார். மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த மல்லிகாவின் குடும்பத்தினருக்கு 2 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார்.

ஆந்திர மாநிலம் திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி தமிழகத்தை சேர்ந்த பெண் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ரூ.25 லட்சம் வழங்கப்படும் என ஆந்திர அரசு அறிவித்துள்ளது.

திருப்பதியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற திருமலை ஏழுமலையான் கோவிலில் 10ம் தேதி (நாளை) சொர்க்கவாசல் திறக்கப்பட்டு, 19ம் தேதி வரை பக்தர்கள் அதன் வழியே தரிசனத்துக்காக அனுமதிக்கப்பட உள்ளனர். வைகுண்ட ஏகாதசிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் போர்க்கால அடிப்படையில் தேவஸ்தான நிர்வாகம் செய்து வருகிறது.

இந்த சூழலில் சொர்க்க வாசல் தரிசனத்தில் சாமானியர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் திருப்பதியில் 8 இடங்களில் 90 கவுண்டர் மையங்கள் அமைத்து 9ம் தேதி (இன்று) அதிகாலை 5.30 மணி முதல் இலவச தரிசனத்திற்கான டோக்கன்கள் விநியோகிக்கப்படும் என திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் இலவச தரிசன டிக்கெட்டை பெற நேற்று இரவே ஆயிரக்கணக்கான பக்தர்கள் கவுண்டர்களில் திரண்டிருந்தனர். அப்போது விஷ்ணு நிவாசம், பைரகிபட்டேடா, ராமச்சந்திர புஷ்கரிணி உள்ளிட்ட கவுண்டர்களில் கூட்டம் அதிகம் இருந்தது. அந்த பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் முறையாக செய்யப்படவில்லை. இந்த நிலையில் அங்கு ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி சேலத்தைச் சேர்ந்த மல்லிகா உட்பட 6 பேர் உயிரிழந்தனர். சுமார் 30-க்கும் மேற்பட்டோருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. அவர்கள் திருப்பதியில் உள்ள அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் போலீசார் திணறினார்கள்.

திருப்பதியில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது:

திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலை அறிந்து நான் மிகுந்த மன வேதனை அடைந்தேன். எனது எண்ணமெல்லாம் தங்கள் நெருங்கிய உறவுகளை இழந்து வாடுபவர்களுடன் உள்ளது. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். பாதிக்கப் பட்டவர்களுக்கு ஆந்திர அரசு அனைத்து உதவிகளையும் வழங்கி வருகிறது" என தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், திருப்பதியில் ஏற்பட்ட துயரமான கூட்ட நெரிசல் சம்பவம் மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடைய வேண்டும். இந்த கடினமான நேரத்தில் காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும் பாதிக்கப்பட்ட வர்களுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.

நெரிசலில் சிக்கி பலியானோரின் குடும்பத்தினருக்கு அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள இரங்கல் பதிவில் கூறியிருப்பதாவது:

திருப்பதி கோவிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த பக்தர்கள் உள்ளிட்ட அனைத்து பக்தர்களின் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்களையும் வருத்தங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளோர் விரைவில் பூரண நலம் பெற வேண்டுகிறேன் என கூறியுள்ளார்.

இதேபோல ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி ஆகியோரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இன்று 12 மணி அளவில் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு திருப்பதி வந்தார். கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை சந்தித்து நலம் விசாரித்தார். உயிரிழந்தவர்களின் குடும்பத்தாரை சந்தித்து ஆறுதல் கூறினார்.

கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த வர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.25 லட்சம் நிவாரணம் வழங்கப்படும் என வருவாய்த்துறை அமைச்சர் அங்கனி சத்ய பிரசாத் தெரிவித்தார்.

கூட்ட நெரிசலால் உயிரிழப்பு ஏற்பட்ட விஷ்ணு நிவாசம் பகுதியில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு சொர்க்க வாசல் வழியாக ஏழுமலையானை தரிசிப்பதற்கான இலவச தரிசன டோக்கன் விநியோகிக்கும் பணி இன்று காலை தொடங்கியது. வரிசையில் ஒருவர் பின் ஒருவராக பக்தர்கள் வருவதை அதிகாரிகள் உறுதி செய்தனர். மேலும் பக்தர்களின் வருகையை ஒழுங்குபடுத்தவும், கூட்ட நெரிசலைத் தடுக்கவும் கூடுதல் போலீசார் நிறுத்தப்பட்டு, முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன்,
ஜனவரி 09, 2025

கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது; இளைஞர்களின் எதிர்காலம் பாதிக்கும் 'யுஜிசி' புதிய விதிகளுக்கு எதிராக சட்டசபையில் ஸ்டாலின் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்; அ.தி.மு.க. ஆதரவு: பா.ஜ.க. வெளிநடப்பு

சென்னை, 09 ஜனவரி 2025: 'யுஜிசி' புதிய விதிமுறைகளை திரும்ப பெற மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டசபையில் இன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசினர் தனித்தீர்மானம் கொண்டு வந்தார்.

இந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. தீர்மானத்துக்கு அண்ணா தி.மு.க. ஆதரவு அளித்தது. பா.ஜ.க. எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தது.

'யுஜிசி' புதிய விதிமுறைகள் கூட்டாட்சி தத்துவத்துக்கு எதிரானது. மாநில உரிமைகளில் தலையிடுவதாகும். தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை கடுமையாக பாதிக்கும். இந்த தீர்மானத்தை ஏற்று ஒன்றிய அரசு மனம் மாறாவிட்டால் மக்கள் மன்றத்தையும், நீதிமன்றத்தையும் நாடுவோம் என ஸ்டாலின் கூறினார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்ட வரைவு நெறிமுறைகளைத் திரும்பப் பெற வேண்டுமென ஒன்றிய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

"வறியவர்க்கெல்லாம் கல்வியின் வாடை வரவிடவில்லை மதக்குருக்களின் மேடை நறுக்கத் தொலைந்தது அந்த நாட்பட்டப் பீடை நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை!"- என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன். அந்தக் கல்வி நீரோடையை மீண்டும் தடுக்க எல்லா வகையிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

எல்லோரும் படித்து, எல்லோரும் வேலைக்குப் போய், எல்லோரும் தலைநிமிர்வது பிடிக்காதவர்களால் தொடர்ச்சியாக கல்வித்துறையில் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. பள்ளிக்கல்வியைச் சிதைப்பதற்காகவே புதிய தேசிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்து திணிக்கிறார்கள். அரசுப் பொதுத்தேர்வு என்ற பெயரால் வடிகட்டி, வடிகட்டி அனைவரையும் கல்வியைத் தொடர முடியாமல் செய்யப் போகிறார்கள். அதனைத் தமிழ்நாடு அரசு கடுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறது.

நீட் தேர்வு மூலமாக மருத்துவக் கனவைச் சிதைக்கும் காரியத்தை பல ஆண்டுகளாகச் செய்து வருகிறார்கள். தங்கை அனிதா உள்ளிட்ட எத்தனையோ உயிர்களை நாம் இழந்தோம். ஆனால், ஆண்டுதோறும் ஆள்மாறாட்டம், வினாத்தாள் லீக், மதிப்பெண் குளறுபடி என்று எல்லா முறைகேடும் நடப்பதில் நம்பர் ஒன் தேர்வாக நீட் தேர்வு

இருக்கிறது.

இதேபோல பல்கலைக் கழகங்களையும் சிதைக்கும் முயற்சியை ஒன்றிய அரசு தொடங்கிவிட்டது. துணைவேந்தரை தேர்வு செய்ய அமைக்கப்படும் தேர்வுக் குழுவை கவர்னரே தீர்மானிப்பார் என்று யு.ஜி.சி. எனப்படும் பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறை வகுத்துள்ளது. துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை கவர்னர் கையில் கொடுப்பது, பல்கலைக்கழகங்களைச் சிதைக்கும் காரியமாகத்தான் முடியும். அதற்காகத்தான் இப்படிச் செய்யப் போகிறார்கள். இந்த விவகாரத்தில் ஏற்கனவே தமிழ்நாடு அரசுக்கும், கவர்னருக்கும் கருத்து மோதல் தொடர்ந்து நடந்து வருகிறது.

துணைவேந்தரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக் குழுவில் யு.ஜி.சி. பரிந்துரை செய்யும் உறுப்பினர்களை கவர்னர் நியமித்தார். நாம் அதனை ஏற்கவில்லை. இந்த மோதலுக்கு ஆக்கபூர்வமான தீர்வு எட்டப்படாத நிலையில், தன்னிச்சையாக துணைவேந்தர்களை நியமிக்கும் அதிக அதிகாரங்களை கவர்னர்களுக்கு வழங்குவது சரியுமல்ல; முறையுமல்ல. இவர்களாக ஒரு உத்தரவைப் போட்டுவிட்டு, இதனை அமல்படுத்தாத கல்வி நிறுவனங்கள் யு.ஜி.சி. திட்டங்களில் பங்கேற்க முடியாது என்று சொல்வது அநியாயம் அல்லவா? அதுவும், பட்டங்களை வழங்க முடியாது என்பது பகிரங்கமான மிரட்டல் அல்லவா? வேறு எதை அது எடுத்துக்காட்டுகிறது?

மாநில அரசுகள் தங்கள் வளத்தில், பொருளாதார பலத்தில் கட்டிய பல்கலைக்கழகங்களை அபகரித்துக் கொள்கிற அக்கிரமமான முயற்சியாகவே இதனைக் கருத வேண்டி இருக்கிறது. இந்த விதிமுறை கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது; மாநில உரிமைகளில் தலையிடுவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைச் சிறுமைப்படுத்தும் செயல்! மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்களிடம் தான் கல்வி தொடர்பான அதிகாரம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான், அனைத்து மக்களுக்குமான கல்வியை முழுமையாகக் கொடுக்க முடியும்.

நியமனப் பதவிகளில் ஒருசில ஆண்டுகள் இருந்துவிட்டுப் போய்விடுபவர்களுக்கு ஒரு மாநில மக்களின் அடிப்படை உணர்வைப் புரிந்துகொள்ள இயலாது. ஒன்றிய அரசு கல்வித் துறையில் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வது இல்லை.

வரம்பற்ற கட்டணம், இடஒதுக்கீடு இல்லாத தன்மை என வரம்பு மீறும் தனியார் நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களுக்கு கடிவாளம் போடுவதற்கு சிறு துரும்பும் கிள்ளிப் போட மறுக்கும் ஒன்றிய அரசு; தனது நிதிநிலை அறிக்கையில் உயர்கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்துக் கொண்டே வரும் ஒன்றிய அரசு; கல்வித் துறை சார்பில் தமிழ்நாட்டில் ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம், மத்திய பல்கலைக்கழகம் போன்ற ஒரேயொரு புதிய உயர்கல்வி நிறுவனத்தைக் கூட அமைக்காத ஒன்றிய அரசு; ஐ.ஐ.டி. போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் பட்டியலினத்தவர், பிற்படுத்தப்பட்டோரது சட்டப்படியான ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறிய ஒன்றிய அரசு;

மாநிலங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களை தனது முழு கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சி செய்வது கெடுநோக்கம் கொண்டது; சுயநலமானது. நிச்சயமாக மாணவர் நலனை மனதில் கொண்டோ, கல்வித்தரத்தை மேம்படுத்தவோ இந்த முயற்சி நடைபெறவில்லை.

ஒரு தன்னாட்சி பெற்ற தனியார் கல்லூரியே பாடத்திட்டம் வகுத்துப் பட்டமும் வழங்கலாம் என்ற நிலையை ஏற்படுத்திவிட்டு, நூற்றாண்டு பெருமை கொண்ட கல்லூரிகளை அபகரிக்க எத்தனிப்பது அதிகார எதேச்சாதிகாரம். தலைசிறந்த கல்வி நிறுவனங்களை நாட்டிலேயே அதிக அளவில் கொண்டிருக்கும் தமிழ்நாடு, நமது கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி பறிக்கப்படுவதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்காது; அப்படி இருக்கவும் முடியாது.

கல்வியையும், மக்களையும் காக்க, எதிர்கால தலைமுறையைக் காக்க தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒட்டுமொத்தமாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியாக வேண்டும். இந்தத் தீர்மானத்தை ஏற்று ஒன்றிய அரசு மனம் மாறாவிட்டால் மக்கள் மன்றத்தையும் நீதிமன்றத்தையும் நாடுவோம் என்ற முன்னுரையுடன் இந்தத் தீர்மானத்தை நான் உங்கள் அனுமதியோடு முன்மொழிகிறேன்.

"பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக சமீபத்தில் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்ட வரைவு நெறிமுறைகளைத் திரும்பப்பெற வேண்டுமென இப்பேரவை கருதுகிறது.

அதேபோல் இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்புகளில் கற்கை முறைகளுக்கான குறைந்தபட்ச வரைவு நெறிமுறைகள், 2024 மற்றும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் ஆசிரியர்கள், கல்விப் பணியாளர்கள் நியமனம் மற்றும் பதவி உயர்வு குறித்து வெளியிட்ட வரைவு நெறிமுறைகள், 2025 ஆகியன தேசிய கல்விக் கொள்கை, 2020-ன் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் இத்தகைய நடவடிக்கைகள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடான கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது மட்டுமல்ல; தமிழ்நாட்டின் உயர் கல்வி முறைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாகவும் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் சமூகநீதிக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வலுவான உயர் கல்விக் கட்டமைப்பை இந்த வரைவு நெறிமுறைகள் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாலும், தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை கடுமையாகப் பாதிக்கும் என்பதாலும் பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் இந்த இரண்டு வரைவு நெறிமுறைகளையும், துணைவேந்தர் நியமனம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள வரைவு நெறிமுறைகளையும் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று ஒன்றிய அரசின் கல்வித் துறையை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது."

இவ்வாறு முதல்வர் பேசினார்.

கவர்னர்களுக்கு கூடுதல் அதிகாரம் அளிக்கும் யுஜிசியின் புதிய விதிகளுக்கு எதிராக தமிழக சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்தை எதிர்த்து பா.ஜ.க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்த நிலையில், காங்கிரஸ், விசிக, இடதுசாரிகள் உள்ளிட்ட திமுக கூட்டணிக் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சியான அண்ணா தி.மு.க. ஆதரவளிப்பதாக தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து, குரல் வாக்கெடுப்பு மூலம் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அப்பாவு அறிவித்தார்.

'மகளிர் உரிமைத் தொகையை வங்கி கணக்கில் இன்றே வரவு வையுங்கள்': ஸ்டாலின் உத்தரவு

சென்னை, 09 ஜனவரி 2025: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழர் திருநாளான பொங்கல் திருநாளையொட்டி 1 கோடியே 14 லட்சத்து 61 ஆயிரம் மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை இன்றே வழங்கிட உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தமிழ்நாட்டு மக்களிடம் குறிப்பாக பெண்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிலுள்ள தகுதி வாய்ந்த 1 கோடியே 14 லட்சத்து 61 ஆயிரம் பெண்களுக்கு ஒவ்வொரு மாதமும் அவரவர் வங்கி கணக்குகளில் ரூ.1000 வரவு வைக்கப்படுகிறது.

எதிர்வரும் தமிழர் திருநாளான பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடிடும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 1000 ரூபாயினை முன்கூட்டியே வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவின் மூலம் பயன்பெறும் பெண்களின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கும் பணிகள் இன்று காலை முதலே தொடங்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் இன்று அவர்களின் வங்கி கணக்குகளில் ரூ.1000 - வரவுவைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுச் செயலாளராக எடப்பாடிக்கு அங்கீகாரம்: தேர்தல் ஆணைய விசாரணைக்கு ஐகோர்ட் இடைக்கால தடை

சென்னை, 09 ஜனவரி 2025: அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டது குறித்து விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்திற்கு இடைக்கால தடை விதித்து சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

அண்ணா தி.மு.க. உள்கட்சி விவகாரம் தொடர்பாக நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்குகளில் முடிவு காணும் வரை அண்ணா தி.மு.க.வுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்க கூடாது என சூரியமூர்த்தி என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு விசாரணையின் போது மனுதாரரின் கோரிக்கை 4 வாரத்தில் பரிசீலித்து முடிவெடுக்கப்படும் என தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதை பதிவு செய்து கொண்ட ஐகோர்ட் நான்கு வாரங்களில் மனுவை பரிசீலித்து முடிவெடுக்க உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தது.

இந்த உத்தரவின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது.

இந்த விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்ரமணியன் மற்றும் ஸ்ரீ குமரப்பன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அண்ணா தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கட்சியில் உறுப்பினர்களாக இல்லாத தனிப்பட்ட நபர்கள் கட்சி பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை எதிர்த்து தேர்தல் ஆணையத்தில் முறையிட்டு இருக்கிறார்கள். இதை விசாரிக்க தேர்தல் ஆணையத்திற்கு எந்த அதிகாரமும் இல்லை என்று வாதிட்டார்.

இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், இந்த விவகாரம் தொடர்பாக உரிமையியல் வழக்குகள் நிலுவையில் இருக்கக்கூடிய நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரணை நடத்த முடியாது என கூறி தேர்தல் ஆணையத்தின் விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டனர். மேலும் மனுவுக்கு ஜனவரி 27ம் தேதிக்குள் பதிலளிக்கும் படி தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டு விசாரணையை நீதிபதிகள் தள்ளி வைத்துள்ளனர்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

“இனி எந்த கதாபாத்திரத்திலும் நடிக்கும் துணிச்சலை ‘வணங்கான்’ கொடுத்துள்ளது” ; நாயகி ரோஷினி பிரகாஷ்

சென்னை, 09 ஜனவரி 2025: சுரேஷ் காமாட்சியின் வி ஹவுஸ் புரொடக்சன்ஸ் தயாரிப்பில் இயக்குநர் பாலாவின் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் ‘வணங்கான்’. அருண்விஜய் கதாநாயகனாக நடித்துள்ள இந்த படத்தில் கதாநாயகியாக ரோஷினி பிரகாஷ் நடித்துள்ளார். பொங்கல் பண்டிகை ரிலீஸாக வரும் ஜனவரி 10ஆம் தேதி இந்த படம் வெளியாக இருக்கிறது..

பொதுவாகவே இயக்குநர் பாலாவின் படங்களில் நடிக்கும் கதாநாயகர்கள் அதன்பிறகு எந்த அளவிற்கு திரையுலகப் பயணத்தில் உச்சத்தை நோக்கிச் செல்வார்களோ, அதே போல கதாநாயகிகளும் மிகப்பெரிய அளவில் கவனம் பெறவே செய்கிறார்கள். அபிதா, லைலா, பூஜா, ஜனனி ஐயர், வரலட்சுமி என இதற்கு முந்தைய பல உதாரணங்களை சொல்லிக் கொண்டே போகலாம். அந்த வகையில் ‘வணங்கான்’ திரைப்படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார் என அறிவிப்பு வெளியானதில் இருந்தே பரபரப்பு வளையத்திற்குள் வந்துவிட்டார் நடிகை ரோஷினி பிரகாஷ்.

2016ல் இருந்து தெலுங்கு, கன்னடம், தமிழ் என மும்மொழிகளில் தனது பயணத்தைத் தொடர்ந்து வருகிறார் ரோஷினி பிரகாஷ். கடந்த சில மாதங்களுக்கு முன்பு கன்னடத்தில் இவரது நடிப்பில் வெளியான மர்ஃபி திரைப்படம் அதிக வரவேற்பை பெற்றுள்ளது.

அதேபோல மறைந்த நடிகர் புனீத் ராஜ்குமார் கடைசியாக நடித்த லக்கிமேன் திரைப்படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார் ரோஷினி பிரகாஷ். தமிழில் ஜடா என்கிற படத்தில் நடித்திருந்தாலும் தனது திரையுலக பயணத்தின் போக்கையே மாற்றப் போகும் படமாக ‘வணங்கான்’ படத்தை தான் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து வருகிறார். படம் இன்னும் சில தினங்களில் வெளியாகவுள்ள நிலையில் ‘வணங்கான்’ படம் குறித்தும் அதில் நடித்த அனுபவம் குறித்தும் நம்மிடம் பகிர்ந்து கொண்டார் ரோஷினி பிரகாஷ்.

“வணங்கான் படத்திற்காக இன்ஸ்டாகிராமில் எனது ப்ரொபைல் பார்த்து எனக்கு ஆடிசனில் கலந்து கொள்ள அழைப்பு வந்தது. அங்கே போனதும் சில காட்சிகளை கூறி எனது கதாபாத்திரம் பற்றி சொல்லி நடித்துக் காட்டச் சொன்னார்கள். அங்கேயே உடனே ஓகேயும் சொல்லிவிட்டார்கள். பொதுவாகவே பாலா சார் படப்பிடிப்பில் கடுமையாக நடந்து கொள்வார் என்பது போன்று சில செய்திகள் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் படப்பிடிப்பிற்கு சென்றபோது தான் அது எதுவுமே உண்மை அல்ல என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. அந்த அளவிற்கு தனக்கு என்ன தேவையோ அதை அழகாக நம்மிடம் விளக்கி அவருக்கு வேண்டிய நடிப்பை பெற்றுக் கொள்வார்.

பாலா சாரின் படங்களில் நடிக்கும் அனைவருக்குமே மிக முக்கியத்துவம் கொடுக்கப்படும். நான் இந்த படத்தில் நடித்துள்ள கதாபாத்திரம் எனது திரையுலகப் பயணத்தில் இதுவரை நான் நடித்ததிலேயே கடினமான ஒன்று. இந்த கதாபாத்திரத்தில் நடித்த பிறகு இனி அடுத்து எந்த படம் வந்தாலும் எந்த கதாபாத்திரம் கொடுத்தாலும் நடிக்கக்கூடிய துணிச்சலை இந்த படம் கொடுத்துள்ளது. அதேபோல காட்சிகளில் சிறப்பாக நடித்தால் தட்டிக்கொடுத்து பாராட்டவும் தயங்க மாட்டார். முதல் கட்ட படப்பிடிப்பை திட்டமிட்டதற்கு மூன்று நாட்கள் முன்கூட்டியே முடித்தபோது அந்த அளவிற்கு சந்தோஷப்பட்டார் இயக்குநர் பாலா.

அது மட்டுமல்ல அவரிடம் நாம் துணிந்து நமக்கான சந்தேகங்களைக் கேட்டு அதன்படி நடிக்க முடியும். அதேசமயம் அவர் நம்மிடம் இருந்து நடிப்பை வாங்கும் விதத்தைப் பார்க்கும் போது தான் நமக்குள்ளேயே இவ்வளவு நடிப்புத் திறன் இருக்கிறதா என்பது தெரிய வரும். அந்த வகையில் அவர் எனக்கு ஒரு குருநாதர்.

நாயகன் அருண்விஜய்யும் நானும் ஒரு காட்சியில் இணைந்து நடிக்கும் போது அவரிடம் நான் நடிப்பதற்கான ஒரு ஸ்பேஸ் வேண்டும் எனக் கேட்டால் அதை அழகாக உள்வாங்கிக் கொண்டு உதவி செய்வார். இயக்குநர் பாலா என்ன சொல்கிறாரோ அதை அழகாக உள்வாங்கிக் கொண்டு எவ்வளவு கடினமான காட்சி ஆனாலும் அதை உடனே செய்து காட்டுவார் அருண் விஜய்.

இயக்குநர்கள் சமுத்திரக்கனி, மிஸ்கின், ஏ எல் விஜய் என மிகப் பெரிய ஜாம்பவான்கள் இயக்குநர்களுடன் சேர்ந்து பணியாற்றியதால் ‘வணங்கான்’ படத்தின் படப்பிடிப்பு எனக்கு ஒரு மாஸ்டர் கிளாஸ் போல தான் இருந்தது. இவர்களுடன் இணைந்து நடிக்கும் போது தங்களை ஒரு பெரிய இயக்குநர்களாகவோ நடிகர்களாகவோ அவர்கள் ஒருபோதும் நினைத்துக் கொள்வதில்லை. புதியவர் தானே என யாரையும் நினைக்காமல் அவர்களுக்கு வேண்டியதையும் கற்றுக் கொடுக்கிறார்கள். இப்படி நான்கு இயக்குநர்களுடன் சேர்ந்து ஒரே படத்தில் பணியாற்றுவது என்பது ரொம்பவே அரிதாக கிடைக்கக்கூடிய வாய்ப்பு. அது எனக்கு கிடைத்திருக்கிறது.

அதேபோல நடிகை வரலட்சுமி சரத்குமாரின் தாயார் சாயாதேவி அம்மா இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். அவருடன் காட்சிகளில் நடித்ததை விட செட்டில் அவருடன் இருந்த சமயத்தில் அவர் மீது எனக்கு நெருங்கிய பிணைப்பு உருவானது. கன்னியாகுமரி போன்ற இடங்களில் படப்பிடிப்பு நடைபெற்ற போது அவருக்கு படப்பிடிப்பு இல்லை என சில நேரங்களில் கிளம்பி ஊருக்கு சென்று விட்டால் அவர் திரும்பி வரும் வரை ஏதோ மிஸ் பண்ணியது போன்று இருக்கும். அவருடன் அமர்ந்து பேசும்போது எனக்கு என் வீட்டாருடன் இருப்பது போன்ற ஒரு உணர்வு கிடைத்தது.

ஒரு படப்பிடிப்பு தளத்தில் எப்படி ஒரு கட்டுப்பாடாக, ஒழுக்கமாக நடந்து கொள்ள முடியும் என்பது பாலா சாரின் படப்பிடிப்பில் அவ்வளவு தெளிவாக தெரிந்தது. இதுவரை மூன்று மொழிகளிலும் பல படங்களில் நடித்திருந்தாலும் ‘வணங்கான்’ படம் எனக்கு ரொம்பவே ஸ்பெஷல். இந்த படத்தில் நடித்ததன் மூலம் சினிமாவில் அடுத்து நான் பயணிக்க வேண்டிய பல விஷயங்களை இதில் கற்றுக் கொள்ள முடிந்தது. வெளிப்படையாகவே சொன்னால் இந்த படத்தில் நடிப்பதற்கு முன்பு வரை என்னை அவ்வளவாக யாருக்கும் தெரியாது. இந்த படத்தில் நடிக்க ஆரம்பித்த பின்பு தான் என்னைப் பற்றி ஓரளவுக்கு வெளியே தெரிய ஆரம்பித்தது. அந்த வகையில் இது ஒரு அதிர்ஷ்ட வாய்ப்பு என்று தான் சொல்வேன்” என்று கூறினார் ரோஷினி பிரகாஷ். மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்

ஈரானிய படங்களுக்கு நிகராக தமிழில் உருவாகியுள்ள ‘ஹபீபி’

நவீன ஏ ஐ தொழில்நுட்பத்தில் இசை முரசு நாகூர் ஈ எம் ஹனீஃபா குரலில் உருவான பாடல்

சென்னை, 09 ஜனவரி 2025: நேசம் என்டர்டெயின்மெண்ட் தயாரிப்பில் உருவாகியுள்ள படம் ‘ஹபீபி’. தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சியின் வி ஹவுஸ் புரொடக்சன்ஸ் இந்தப்படத்தை வெளியிடுகிறது. ‘அவள் பெயர் தமிழரசி’, ‘விழித்திரு’ ஆகிய படங்களை இயக்கிய இயக்குநர் மீரா கதிரவன் இந்தப்படத்தை இயக்கியுள்ளார்.. சமீபத்தில் ஹபீபி திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

ஈஷா என்கிற இளைஞன் இதில் அறிமுகமாக, இயக்குனர் கஸ்தூரிராஜா ஒரு முக்கியமான பாத்திரத்தில் நடித்திருக்கிறார். 'ஜோ' திரைப்படத்தில் நடித்து ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்ற மாளவிகா மனோஜ் இதில் நாயகியாக நடித்திருக்கிறார்.

கவிஞர் யுகபாரதி பாடல்கள் எழுத, இன்றைய இளைய தலைமுறையினருக்கு பிடித்தவர்களில் ஒருவரான சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார். மேலும் ஒரு சிறப்பம்சமாக நவீன ஏ ஐ தொழில்நுட்பத்தில் இசை முரசு நாகூர் ஈ எம் ஹனீஃபா அவர்களின் குரலில் 'வல்லோனே வல்லோனே' என்கிற பாடலையும் இந்தப்படத்திற்காக உருவாக்கி இருக்கின்றனர்.

படம் குறித்து இயக்குநர் மீரா கதிரவன் கூறுகையில், “உலகம் முழுவதும் சுமார் 250 கோடி இஸ்லாமிய மக்கள் வாழ்கிறார்கள். அவர்களின் சமூக பொருளாதார வாழ்வியல் சூழலை மையப்படுத்தி ஆயிரக்கணக்கான படங்கள் வருகின்றன. இந்தியாவிலும் இஸ்லாமிய மக்களின் வாழ்க்கையை. பேசுகிற படங்கள் நமது பக்கத்து மாநிலமான கேரளாவில் தொடர்ந்து வெளி வருகிறது. அதற்கான ஒரு வியாபாரம் தளமும் ரசிகர் கூட்டமும் இருக்கிறது. தமிழ் திரைப்பட வரலாற்றில் தமிழகச் சூழலில் அந்த இடம் நிரப்பப்படவில்லை என்றே கருதுகிறேன். ஆகவே தமிழ் சினிமா வரலாற்றில் ஒரு முழுமையான இஸ்லாமிய மக்களின் வாழ்க்கையைப் பேசுகிற சினிமாவாகவும் அதேவேளை, எல்லோருக்குமான சினிமாவாகவும் இதை உருவாக்கியிருக்கிறேன்.

ஏற்கனவே நவீன ஏ ஐ தொழில்நுட்பத்தில் மறைந்த மலேசியா வாசுதேவன், எஸ் பி பாலசுப்ரமணியம், சாகுல் அமீது , பம்பா பாக்கியா முதல் பலரின் குரலையும் நீங்கள் கேட்டிருப்பீர்கள். அந்த வரிசையில் 'வல்லோனே வல்லோனே' பாடலில் ஏறக்குறைய நாகூர் ஈ எம் ஹனீஃபாவின் குரலை கொண்டு வந்திருக்கிறோம் என்பதை பாராட்டுக்களின் வழியாக அறிகிறோம்/

உலக சினிமா என்கிற வார்த்தையை உச்சரிக்கும்போது ஈரான் என்கிற நாடு நம் எல்லோருடைய நினைவுக்கும் வரும். உலகம் முழுவதும் அந்தத் திரைப்படங்களுக்கு ரசிகர்கள் உண்டு.. அப்படி ஒரு படைப்பாக ‘ஹபீபி’யை நம் ரசிகர்களுக்கு தர முயற்சித்து இருக்கிறோம்” என்கிறார்.

சித்திரம் பேசுதடி, படத்தில் தொடங்கி இப்போது ஜெயம் ரவியின் ஜீனி வரை மோஸ்ட் வான்டட் ஒளிப்பதிவாளராக பணியாற்றி வரும் மகேஷ் முத்துசுவாமி இந்த படத்திற்கு ஒளிப்பதிவு செய்துள்ளார்.. தேசிய விருது பெற்ற எடிட்டர் ராஜா முகமது படத்தொகுப்பை கவனிக்கிறார். மலையாளத்தில் பஹத் பாசில் நடித்த மாலிக் படத்திற்காக கேரள அரசின் சிறந்த கலை இயக்குனர் விருதை பெற்ற அப்புன்னி சாஜன் என்பவர் இந்த படத்தின் கலை இயக்குனராக பணியாற்றியுள்ளார். விரைவில் ‘ஹபீபி’ படத்தின் ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட இருக்கிறது. மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்

நாளை முதல் வணங்கான் “ரகசியத்தை வெளியே சொன்னால்..?‘ ; வணங்கான் படத்தின் கதையை உடைத்த இயக்குநர் பாலா

சென்னை, 09 ஜனவரி 2025: பொங்கல் பண்டிகை வெளியீடாக ‘வணங்கான்’ திரையரங்குகளில் நாளை (ஜனவரி-10) வெளியாகிறது.

சுரேஷ் காமாட்சியின் ‘வி ஹவுஸ் புரொடக்சன்ஸ்’ தயாரிப்பில் பாலாவின் இயக்கத்தில் அருண் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள வணங்கான் மிகப்பெரிய எதிர்பார்ப்பை உருவாக்கியுள்ளது. குறிப்பாக இந்தப்படம் உண்மைக்கு நெருக்கமான சம்பவங்களின் அடிபடையிலானது . இயக்குநர் பாலாவின் படங்கள் எப்போதுமே உணர்வுப்பூர்வமானவை. இதுவரை திரையில் நாம் பார்த்திராத எளிய மனிதர்களின் வாழ்க்கையை, அவர்களது இன்னொரு பக்கத்தை நமக்கு அறிமுகப்படுத்துபவை.. வணங்கான் படமும் அப்படி ஒரு படைப்பாகத்தான் உருவாகியுள்ளது.

உங்களுக்குத் தெரிந்த ஒரு ரகசியத்தை வெளியில் சொன்னால் பத்து பேருக்கு பாதிப்பு வரும்.. ஆனால் சொல்லாமல் மனதிலேயே பூட்டிக்கொண்டால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. இந்த சூழலில் என்ன முடிவெடுப்பீர்கள் என்பது தான் வணங்கான் படத்தின் ஒன் லைன் கதை. அருண்விஜய் இந்தப் படத்திற்காக தன்னை இதுவரை இல்லாத அளவில் அப்படியே மொத்தமாக உருமாற்றிக்கொண்டுள்ளார்.. தரமான படைப்புகளின் மூலம் ரசிகர்களின் ரசனைக்குத் தீனி போடும் விதமாக படங்களைத் தயாரித்து வரும் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி ‘வணங்கான்’ மூலம் மீண்டும் ஒருமுறை அதை நிரூபிக்க தயாராகி வருகிறார்.

கதாநாயகியாக ரோஷினி பிரகாஷ் நடிக்கிறார். முக்கிய வேடங்களில் சமுத்திரக்கனி, மிஷ்கின், மற்றொரு நாயகி ரித்தா உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். கார்த்திக் நேத்தாவின் பாடல்களுக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்க பின்னணி இசையை சாம் சி.எஸ் மேற்கொண்டுள்ளார். ஒளிப்பதிவை ஆர்.பி.குருதேவ் மேற்கொள்ள படத்தொகுப்பை சதீஷ் சூர்யா கவனிக்கிறார். கலை இயக்குநராக ஆர்.பி.நாகு பொறுப்பேற்றுள்ளார். ஆக்சன் காட்சிகளை ஸ்டண்ட் சில்வா வடிவமைத்துள்ளார். இயக்குநர் பாலா தனது திரையுலகப் பயணத்தில் 25வது வருடத்தில் இருக்கிறார். ஆனால், “நான் சினிமாவில் சாதித்துவிட்டதாக நினைக்கவில்லை. அதில் எனக்கு திருப்தியும் இல்லை.. ஆனால் என் படங்கள் வந்த பிறகு தமிழ் சினிமாவில் கொஞ்சம் மாற்றம் ஏற்பட்டதாக பலர் சொலும்போது சின்னதாக ஒரு சந்தோசம். ஆனால் அதற்காக நான் மார்தட்டிக்கொள்ள விரும்பவில்லை” என்கிறார் தன்னடக்கத்துடன்.

வணங்கான் ஜாலியாகத் தொடங்கி, முடியும்போது கனத்த மௌனத்தை படம் பார்க்கும் ஒவ்வொருவரின் மனதிலும் ஏற்படுத்தும் என்பது உறுதி. சக மனிதர்களிடையே கவனிக்கத் தவறும் இயல்புகளை காட்சிப்படுத்துவதில் மிக நுணுக்கமாக கையாள்பவர் இயக்குநர் பாலா. அந்தவகையில் பார்வையாளர்களுக்கான தித்திப்பான பொங்கலாக வணங்கான் அமையும் என்ற எதிர்பார்ப்பு கூடியுள்ளது. தமிழர் திருநாளை முன்னிட்டு தொடங்கும் விடுமுறை நாட்களை கருத்தில்கொண்டு நாளை (ஜன- 10-2025) வெளியாகிறது "வணங்கான்". மக்கள் தொடர்பு ; ஏ.ஜான்

செமி கண்டக்டர் புத்தாக்கங்களை அறிமுகம் செய்ய சிங்கப்பூர் பி டி டபிள்யூ குழுமத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் பார்ட்ரானிக்ஸ் இந்தியா லிமிடெட்

சென்னை, 09 ஜனவரி 2025: பெரு நிறுவனங்களுக்கு நவீன தொழில்நுட்பத் தீர்வுகளை வழங்கி நிதி - தொழில்நுட்ப பிசினஸ் தீர்வு துறையில் முதன்மை வகிக்கும் பார்ட்ரானிக்ஸ் இந்தியா லிமிடெட் மற்றும் சிங்கப்பூரை தளமாக கொண்டு செமிகண்டக்டர் தீர்வுகளை வழங்கி வரும் பி டி டபிள்யூ குழுமம் ஆகிய இரண்டும், இந்தியாவின் செமிகண்டக்டர் தொழில்துறை மேலும் வலுப்படுத்துவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம் ஒ யூ) கையெழுத்திட்டிருக்கின்றன. தெலங்கானா மாநிலத்தின் தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் அமைச்சர் பங்கேற்ற ஒரு கூட்டத்தை தொடர்ந்து இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஐதராபாத்தில் கையெழுத்தானது. உலகளவில் செமிகண்டக்டர் தயாரிப்பிற்கான முதன்மை மையமாக ஆகவேண்டும் என்ற இந்தியாவின் பேரார்வம் மிக்க பயணத்தில் இந்த ஒப்பந்தமானது, ஒரு முக்கியமான மைல்கல் நிகழ்வைக் குறிக்கிறது. சிங்கப்பூரை அடித்தளமாக கொண்டு செமிகண்டக்டர் தீர்வுகளை வழங்கி வரும் நிறுவனமான பி டி டபிள்யூ குழுமம், இந்தியச் சந்தையில் கால் பதிப்பதற்கும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுத்திருக்கிறது. இந்தியாவில் புதிய ஃபேப்ரிகேஷன் மையங்களை நிறுவுவதற்கு உதவவும், உள்நாட்டளவில் செமிகண்டக்டர்களை தயாரிக்கவும் மற்றும் அவைகளுக்கான சாதனங்களை சீராக்கிப் புதுப்பிக்கவும், புதிய ஆலைகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. அத்துடன், செமிகண்டக்டர் உற்பத்தி, செயல்முறைகள் மற்றும் சாதனங்கள் குறித்து பயிற்சியளிப்பு திட்டங்களையும் பி டி டபிள்யூ குழுமம் வழங்கும். பி டி டபிள்யூ குழுமம் மற்றும் பார்ட்ரானிக்ஸ் ஆகிய இரு நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் முன்வரைவு திட்டமானது, செமிகண்டக்டர் தொழில்துறையின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்திசெய்ய இந்தியாவின் உற்பத்தி, புதுப்பித்தல் மற்றும் பயிற்சிக்கான அமைவிடங்களை நிறுவுவதை இலக்காகக் கொண்டிருக்கிறது. இந்நடவடிக்கையானது, செமிகண்டக்டர் தயாரிப்புகள், சேவைகள் மற்றும் பயிற்சியில் புத்தாக்கத்தை புகுத்தி அதன்மூலம் இந்திய செமிகண்டக்டர் செயல்தளத்தில் அதிரடியான நிலைமாற்றத்தை உருவாக்கும். கூடுதலாக, உலகளவில் செமிகண்டக்டருக்கான புவிமையமாக உருவாவது என்ற நமது இந்திய நாட்டின் குறிக்கோளுக்கு இணக்கமாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உற்பத்தி, பணியாளர்களுக்கு பயிற்சி மற்றும் சர்வதேச அளவிலான ஒத்துழைப்புகள் ஆகிய நடவடிக்கைகளுக்கும் இது ஆதரவளிக்கும். உலகெங்கிலும் 14-க்கும் அதிகமான நாடுகளில் செயலிருப்பைக் கொண்டிருக்கும் பி டி டபிள்யூ, உலகளவில் சுமார் 700-க்கும் அதிகமான ஃபேப்ரிகேஷன் மையங்களைக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட வெண்டார் என்ற அந்தஸ்துடன், உலகின் ஒரே புதுப்பிப்பாளர் என்ற பெருமையைக் கொண்டிருக்கிறது. டிஎஸ்எம்சி, யூஎம்சி, குளோபல் ஃபவுண்டரிஸ், சோனி, சாம்சங், மைக்ரான், எஸ் டி மைக்ரோ, இன்ஃபினியான், டெக்ஸாஸ் இன்ஸ்ட்ரூமென்ட் போன்ற சந்தையில் முன்னணி நிறுவனங்கள் பி டி டபிள்யூ குழுமத்தின் வாடிக்கையாளர்களாக இருக்கின்றன. மிதமான விலையில் பவர் செமிகண்டக்டர் சாதனத்தை வாங்கி, புதுப்பித்து அதை நிறுவுவதில் இக்குழுமம் கொண்டிருக்கும் திறன்கள், செமிகண்டக்டர் சந்தையை தாராளமயமாக்க வேண்டுமென்ற இந்தியாவின் குறிக்கோளுடன் நேர்த்தியாகப் பொருந்திப் போகிறது. முன்னேற்றத்திற்கான புதிய கதவுகளை இது திறந்துவிடும் என்பது நிச்சயம்.

மொபைல் ஏ ஐ அனுபவங்களில் அடுத்த பெரிய பாய்ச்சலை சாம்சங் ஜனவரி 22 அன்று அறிவிக்கிறது

கோயம்புத்தூர் சென்னை, 09 ஜனவரி 2025: மிகவும் இயற்கையான மற்றும் உள்ளுணர்வு கொண்ட ஏ ஐ க்கு தயாராகுங்கள். கேலக்ஸி ஏ ஐ இன் அடுத்த பரிணாமம் வருகிறது, மேலும் இது ஒவ்வொரு நாளும் நீங்கள் உலகத்துடன் தொடர்பு கொள்ளும் முறையை மாற்றப் போகிறது. புதிய கேலக்ஸி எஸ் சீரிஸ் இப்போது மற்றும் எதிர்காலத்தில் மொபைல் ஏ ஐ மீண்டும் ஒரு முறை புதிய அனுபவத்தை தர உள்ளது.

ஜனவரி 22 அன்று, சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் சான் ஜோஸில் அன்பேக்டு நிகழ்வை நடத்துகிறது. மொபைல் ஏ ஐ - உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும் தடையற்ற வசதியைக் கொண்டுவரும் பிரீமியம் கேலக்ஸி புதுமைகளில் ஒரு புதிய அத்தியாயத்தை நாங்கள் வெளியிடும்போது எங்களுடன் சேருங்கள். இந்த நிகழ்வு

Samsung.com/in, சாம்சங் நியூஸ்ரூம் இந்தியா மற்றும் சாம்சங்கின் யூடியூப் சேனலில் இரவு 11.30 மணிக்கு தொடங்கி நேரடியாக ஒளிபரப்பப்படும்.

டி டி எஃப் வாசனின் ஐ பி எல்-ல் திரைப்படத்தின் பாடலை பாராட்டிய சங்கர் மகாதேவன்

சென்னை, 09 ஜனவரி 2025: மும்பையில் நடந்த பாடல் பதிவின் பொழுது சங்கர் மகாதேவன் பாடலை கேட்டு, தனித்துவமான இசையாக இருப்பதாகவும், இந்த பாடல் எனக்கு கிடைத்திருந்தால் நானும் நன்றாக பாடியிருப்பேன் என்று கூறி இசையமைப்பாளர் அஷ்வின் விநாயகமூர்த்தியை பாராட்டியுள்ளார்.

புகழ்பெற்ற பாடகரும், இசையமைப்பாளருமான சங்கர் மகாதேவன் மகனும், பிரபல இந்தி திரைப்பட பாடகருமான சிவம் மகாதேவன், அறிமுக இயக்குனர் கருணாகரன் ஐ பி எல் திரைப்படத்தில் டூயட் பாடலை பாடியுள்ளார். டி டி எஃப் வாசன், குஷிதா இருவரும் நடிக்கும் இந்த பாடலை அந்தமான், கேரளா, பாண்டிச்சேரி போன்ற எழில்மிகு பகுதிகளில் படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த திரைப்படத்தில் கிஷோர், அபிராமி, சிங்கம்புலி, ஹரீஷ் பேரடி, ஜான் விஜய், 'ஆடுகளம்' நரேன், போஸ் வெங்கட், திலீபன் போன்ற பிரபல நட்சத்திரங்கள் நடித்துள்ளனர். ஜி.ஆர். மதன் கிருஷ்ணன் தயாரிப்பில், விரைவில் வெளியாகவிருக்கும் ஐ பி எல் திரைப்படத்தின் பிண்ணனி இசை சேர்ப்பு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சிகாகோவின் நைட்டிங்கேல் பாயல் ராய் கங்குலி அமெரிக்காவில் இந்திய பாரம்பரிய இசை பள்ளியை தொடங்கினார்

சென்னை, 09 ஜனவரி 2025: ஒரு தேர்ந்த பாடகராக கற்றுக்கொடுக்கும் வகுப்பை அமெரிக்காவின் சிகாகோவில் தொடங்கி இருக்கிறார் இந்தியவைச் சேர்ந்த பாயல் ராய் கங்குலி.

இசைத் துறையில் 20 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் கொண்ட பாயல் ராய் கங்குலி, மேற்கு வங்கத்தை சேர்ந்தவர். தற்போது அமெரிக்காவின் சிகாகோ லேண்டில் வசித்து வரும் இவரை சிகாகோலாண்டின் நைட்டிங்கேல் என மக்கள் குறிப்பிடுகின்றனர். இந்திய பாரம்பரிய இசை, சூஃபி இசை உள்ளிட்டவற்றை இளம் தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்கும் வண்ணம் பாயல் ராய் கங்குலி தற்போது இசைப்பள்ளியை தொடங்கியுள்ளார். சர்வதேச அளவில் தன்னுடைய திறமையால் குளோபல் மியூசிக் ஐகான், இன்டர்நேஷனல் இந்தியன் ஐகான் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றவர் பாயல். இசை பின்னணி கொண்ட குடும்பத்தில் பிறந்த இவர் தன்னுடைய 4 வயது முதல் முறையாக பரதநாட்டியம் மற்றும் பாரம்பரிய இசையை கற்றவர். மெல்லிசையிலும் தாளத்திலும் தேர்ந்த திறன் கொண்ட இவருக்கு குடும்பத்தினரின் முழு ஆதரவும் கிடைத்தது.தன்னுடைய குருநாதரான மோகன்லால் மிஸ்ரா மற்றும் அவருடைய மகன் தீபக் மிஸ்ரா ஆகியோரிடமிருந்து இந்துஸ்தானி, பனாரஸ் கரானா உள்ளிட்ட இசைப் பயிற்சிகளை கற்றுத் தேர்ந்தார். அதன் பின்னர் பூண்டி மகராஜ் சங்கீத் வித்யாபத் என்பவரிடம் பத்தாண்டுகள் இசைப் பயிற்சி பெற்றார். இசை உலகில் வெற்றிக்கு மேல் வெற்றி குவித்துக் கொண்டிருக்கும் பாயல் எளிதில் புகழ் கிடைத்து விடாது என்றும், தொடர் பயிற்சியே அதனை சாத்தியப்படுத்தும் என்றும் கூறுகிறார். சூஃபி இசையில் தன்னை மெருகேற்றிக் கொண்ட அவருக்கு காதல், துக்கம், பிரிவு உள்ளிட்டவற்றை இயல்பாய் வெளிப்படுத்தும் கஸல் இசையின் மீதும் கவனம் திரும்பியது. மேற்குவங்க தனியார் தொலைக்காட்சியின் இசை நிகழ்ச்சியில் பங்கேற்ற பாயல் ராய் கங்குலிக்கு, வங்காளம் மற்றும் இந்தி மொழிகளில் புகழ்பெற்ற இசையமைப்பாளர் ரஞ்சித் பட்டாச்சார்யா வழிகாட்டியாய் கிடைத்தார். ஒவ்வொரு வங்காள குடும்பமும் கொண்டாடும் ரவீந்திர சங்கீதத்தில் பெரும் புகழ் பெற்ற சௌமித் ராயின் பட்டறையில் பாயல் ராபிராகத்தில் பட்டை தீட்டப்பட்டார்.

சாதாரண நடுத்தர குடும்பத்தில் பிறந்த பாயல், தன்னுடைய இசை பயணத்தையும், பணியையும் சரிசமமாக கையாண்டார். மேலும் தன்னுடைய பள்ளிப்பருவ நண்பனையே திருமணம் செய்து கொண்ட அவருக்கு கணவர் குடும்பத்தாரின் முழு ஆதரவும் கிடைத்தது. இப்படி இசை உலகில் தனக்கென ஒரு தனி பாதை அமைத்துக் கொண்ட பாயல் ராய் கங்குலி, தான் கற்றவற்றை பிறருக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்கிற எண்ணத்தில், ஒரு இசை நட்சத்திரம் போல பாடல் பாடுவது எப்படி என்னும் வகுப்புகளை தொடங்கியுள்ளார்.

ஏ.எம். ஜெயின் கல்லூரியில் பொங்கல் விழா உற்சாகமாகவும், மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் பண்பாட்டுத் தொடர்புள்ள பங்களிப்புடன்வும் கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் தமிழின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை முக்கியமாகக் காட்சிப்படுத்தும் விதமாக பொங்கல் சமையல், கோலங்கள் வரைவது, மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.